
# விருட்சம்

VIRUTCHAM



வணிக மாணவர் மன்றம்

வணிக முகாமைத்துவ பீடம்

யாழ். பல்கலைக்கழகம்

COMMERCE STUDENTS UNION
UNIVERSITY OF JAFFNA

# விருட்சம்

## புதிய தொகுதி

## இதழ் 4

# 1999

(கல்வியாண்டு 1996 / 97)

இணை இதழாசிரியர்கள் :
**செல்வன் K. ஜெயதாஸ்**
**செல்வி S. பிரியா**

வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
இலங்கை.

# VIRUTCHAM

New Volume : 1999

Published on : 1999 July

Joint Editors : K. JEYATHAS
S. PIRIYA

Printers : **GANGAI**
**Computer Print**
(Near Brown Road)
Navalar Road, Jaffna.

Address : Commerce Students' Union,
University of Jaffna,
Thirunelvely,
Sri Lanka.

# சுதந்திரத்தின் பின் இலங்கையின் கைத்தொழில் கொள்கைகளின் போக்கு

# THE TREND OF THE SRI LANKAN INDUSTRIAL POLICIES AFTER INDEPENDENCE

கைத்தொழில் மயமாக்கல் கொள்கை எதுவாயினும் இறை, பண நடவடிக்கைகள், உட்கட்டுமான வசதிகள், முதலீட்டு ஊக்குவிப்புக்கள், தனியார், அரசதுறைகளுக்கு தயாரிப்பு நடவடிக்கையில் அளிக்கப்பட வேண்டிய பங்கு, வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான நிபந்தனைகள், தொழில் நுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள், சந்தை அபிவிருத்தி போன்ற பொருளாதாரக் கொள்கையின் பரப்பிற்குள் உள்ளடங்கும் விடயங்களில் ஈடுபடுதலை முக்கியமானதாகக் கொண்டிருக்கும். எனினும் வர்த்தக உபாயமானது கைத்தொழில் மயமாக்கல் அணுகு முறையைத் தீர்மானிப்பதில் ஒரு பாரிய விடயமாக இருந்துள்ளது. இதனால் ஏனைய கைத்தொழில் மயமாக்கற் கொள்கை மாறிகள் (மேற்கூறப்பட்டவை) இவ்வர்த்தக உபாயத்தோடு ஒத்துப்போகக்கூடியதாக அமைவதை பொதுவாகக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறாக கைத்தொழில் மயமாக்கற் கொள்கை கருவிகளில் வர்த்தக மற்றும் நாணய மாற்றுவீதக் கொள்கைகள் முக்கிய இடத்தை பிடித்துள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சுதந்திரம் பெற்ற நாடுகள் அனைத்திலும் கைத்தொழில் மயமாக்கலின் அவசியம் உணரப்பட்டுள்ளதுடன் கைத்தொழில் மயமாக்கலிலே இந்நாடுகள் பின்பற்றிய வர்த்தக உபாயங்களே ஏனைய காரணிகளைத் தீர்மானிப்பவையாக அமைந்துள்ளமை பொதுவானதாகும்.

இலங்கை அரசியற் சுதந்திரம் பெற்ற 1948 ஆம் ஆண்டினைத் தொடர்ந்து ஏற்பட்ட கைத்தொழில் மாற்றத்தினை நாம் பார்க்கும் போது அதன் ஐந்து தசாப்த (1948 - 1997) காலத்தை மூன்று முக்கிய காலகட்டங்களாக வகுத்து ஆராய்வது மிகவும் தெளிவானதொரு கண்ணோட்டமாகும்.

1. கைத்தொழில்த்துறையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை எனக் கூறக்கூடிய காலகட்டம் (1948 - 1960).
2. இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழிலாக்கக் காலகட்டம். (ISI) (1960-1977)
3. ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழிலாக்க (EOI) காலகட்டம். (1977 இற்குப் பின்)

## 1948 - 1960 வரையான காலப்பகுதி

இக்காலப்பகுதியை நோக்கின் இலங்கை சுதந்திரமடைந்த போது ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பெருந்தோட்டத் துறையும் பிழைப்பு மட்டத்திலான குடியான் விவசாயத் துறையுமென ஓர் இரட்டைப் பொருளாதார அமைப்புக் காணப்பட்டது. அத்துடன் யுத்தகால நெருக்கடியை சமாளிக்கவென முற்றிலும் அரசிற்குச் சொந்தமான ஒட்டுப்பலகை, கண்ணாடி, மட்பாண்டம், மருந்துப் பொருட்கள் போன்ற கைத்தொழில் உற்பத்திகள் இறக்குமதிப் பதிலீடாக உருவாகியிருந்தன. இவை யுத்தகாலத்தில் மிகவும் இலாபகரமானவையாக இருந்தன.

சுதந்திரத்தின் பின்னரான முதலாவது தேர்தலில் ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்த போது 1948 இல், இலங்கையின் மொத்தத் தேசிய வருமானம் 2,799 மில்லியன்


By
**S.S.UTHAYAKUMAR,**
*LECTURER,*
*DEPARTMENT OF ECONOMICS,*
*UNIVERSITY OF JAFFNA.*

ரூபா ஆகவும், அதன் வெளிநாட்டுச் சொத்துக்கள் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் ரூபாவாகவும், வர்த்தக நிலுவை மிகைநிலையில் 94 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது. முக்கிய ஏற்றுமதிப் பயிர்களான தேயிலை, தெங்கு, இறப்பர் மட்டும் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 88 வீதத்தினை ஈட்டிக் கொடுத்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)யில் தயாரிப்புத் துறையின் பங்கு 4 வீதமாக மட்டுமே இருந்தது. ஐ.தே.கட்சியின் செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகள் பெருந்தோட்டத்துறையுடனும், அதனைச் சார்ந்த வர்த்தகத் துறையுடனும் ஈடுபட்டவர்கள் என்பதாலும், இலங்கையில் அக்காலத்தில் நிலவிய பொருளாதார சுபிட்சம் காரணமாகவும் வர்த்தக நிலுவை மிகையானது 1948 இல் 94 மில்லியன் ரூபா மிகையாகவும், 1951 இல் 238 மில்லியன் ரூபா மிகையாகவும் இருந்து 1952 இல் 441 மில்லியன் ரூபா பற்றாக்குறையாக மாறினாலும் மீண்டும் 1955 இல் 415 மில்லியன் ரூபா மிகையாகவே இருந்தது. 1951 இல் உலக வங்கியிலிருந்து இலங்கைக்கு வந்த குழுவானது அப்போது இருந்த முதல், முகாமைத்துவம், தொழில்நுட்பம் போன்றவற்றை வைத்து நோக்கிய போது இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தி இன்னமும் சாத்தியமில்லை எனக் கூறியதாலும் கைத்தொழில் துறையிலான மாற்றத்தில் அக்கறை காட்டப்படவில்லை. 1950 இல் தயாரிக்கப்பட்ட ஆறாண்டுத் திட்டத்தில் (1951 - 57 க்கான) மொத்த அரச முதலீட்டில் 5.5 வீதமே கைத்தொழில்துறைக்கு ஒதுக்கப்பட்டது. இது 1952 இல் 6.3 வீதமாக்கப் பட்டது.

யுத்தகால கைத்தொழில்கள் பல நட்டத்தில் இயங்கியமையால் (யுத்தம் முடிவடைந்து இறக்குமதி சீரானதுடன்) அவற்றில் பலவற்றை இவ்வரசு மூடியது. மேலும் அரசுக்குச் சொந்தமான கைத்தொழில்களில் முகாமைத்துவத் திறமையின்மை நிலவுவதால் தனியாரிடம் ஒப்படைக்கும்படி உலகவங்கி கூறிய ஆலோசனைக்கு இணங்க 1954 இல் கைத்தொழில் கொள்கை மாற்றியமைக்கப்பட்டு 1955 இல் அரச ஆதரவில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் அரசிற்குச் சொந்தமான தொழிற்சாலைகள் பொதுக் கூட்டுத்தாபனங்களாக மாற்றப்பட்டன. அத்துடன் 1955 இல் கைத்தொழிலுக்கு ஆராய்ச்சி உதவி வழங்கவும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்கவும் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகமும் நிதியுதவிபுரிய இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் நிறுவப்பட்டன. மேலும் 1955 இல் வெளியான வெள்ளையறிக்கை மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடும் ஊக்குவிக்கப்பட்டது. எனினும் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே இருந்த பொருளாதாரக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வருவதிலோ அல்லது குறித்த கைத்தொழில் உபாயத்தை வகுப்பதிலோ வெற்றி காணவில்லை. பொருளாதாரமானது விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட தன்னிறைவை நோக்கமாகக் கொண்டிருந்தது. வர்த்தகக் கொள்கையானது முற்றுமுழுதான தாராளக் கொள்கையாகவே இருந்தது. இறக்குமதித் தீர்வை சராசரியாக 1947/48இல் 16% ஆகவும் 1955 / 56 இல் 18.6% ஆகவும் மட்டுமே காணப்பட்டது. உயர்தீர்வையான 40 - 100% ஆனது மதுபானம் உள்ளிட்ட ஆடம்பரப் பொருட்களுக்கே காணப்பட்டது. அத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட நாணயமாற்று வீதம் நிலையாக ஒரு ஸ்ரேலிங் பவுணுக்கு 13.30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

1952 இல் மீண்டும் பதவிக்கு வந்த ஐ.தே.கட்சி 1956 இல் பதவி இழக்க இடதுசாரிக் கூட்டணி பதவிக்கு வந்தது. இவர்கள் தூரதிஸ்டியுடன் இலங்கைப் பொருளாதாரத்தை நோக்கினர். கூர்மையான விலைமாற்றங்களினால் பாதிக்கப்படும் பெருந்தோட்டத்துறையில் மட்டும் தங்கியிருப்பது நல்லதல்ல எனக்கண்ட இவர்கள் நீண்டகால நோக்குடைய பேரினப் பொருளாதார திட்டமிடலில் அழுத்தத்தைக் கொடுக்கவென அப்போதைய பிரதமரின் தலைமையின் கீழ் முதன்முதலில் தேசிய திட்டமிடல் சபை (National Planning Council) ஒன்றினை உருவாக்

கின். இவர்களது கைத்தொழில் மேம்பாட்டுக்குத் தேவையான வர்த்தக உபாயங்களுடன் கூடிய தனது புதிய அபிவிருத்தி உபாயத்தை (1959 - 1968) பத்தாண்டுத் திட்டத்தில் இவ்வரசு கொண்டு வந்தது. இதன் முக்கிய அம்சம் திட்டமிடப்பட்ட மொத்த முதலீட்டில் 20.6% கைத்தொழிற்துறைக்கு ஒதுக்கப்பட்டதாகும். எனினும் 1957 இல் இருந்து பற்றாக்குறையாக மாறிய வர்த்தக, நடைமுறைக் கணக்கு மீதிகள், வீழ்ச்சியடைந்த வெளிநாட்டு ஒதுக்குகள் என்பன தீவிரமடைந்ததன் காரணமாக தனது இலட்சியத்தை 1950களின் இறுதிவரை செயற்படுத்த முனையவில்லை. 1950 களில் இறுதிப்பகுதியில் (இலங்கையின் கைத்தொழில் மயமாக்கலின் ஆரம்பகாலம்) சோசலிச நாடுகளின் நிதி, தொழில்நுட்ப உதவிகளுடன் பல அரசுக்குச் சொந்தமான கைத்தொழில் ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவையனைத்தும் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களாகவே இருந்தன. அதாவது வர்த்தக உபாயத்தின் கருவிகளை, குறிப்பாக வர்த்தக, நாணய மாற்றுவீத கொள்கைகளை பயன்படுத்தி உள்ளூர்க் கைத்தொழில்களை அவற்றோடு போட்டியிடும் இறக்குமதிகளில் இருந்து பாதுகாத்து ஓர் உள்ளூர்ச் சந்தை நோக்கிய உற்பத்திக்குச் சாதகமான சூழல் ஏற்படுத்தப்பட்டது. இறக்குமதியாகும் தயாரிக்கப்பட்ட பொருட்கள் மீது இறக்குமதித் தீர்வை மற்றும் அளவுக்கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலமும் உள்ளூர் உற்பத்திக்குத் தேவையான மூலதன, இடைநிலைப் பொருட்கள் மீதான தீர்வையைக் குறைப்பதன் மூலமும் இது மேற்கொள்ளப்பட்டது. 1959 - 68 கால பத்தாண்டுத் திட்டமானது அன்றைய பிரதமரின் படுகொலை மற்றும் சென்மதி நிலுவை, வெளிநாட்டுச்சொத்துக்கள் என்பன அபாயகரமான நிலைக்குச்சென்றமை போன்ற பல காரணங்களால் செயற்படுத்தப்படவில்லை.

## 1960 - 1977 வரையான காலப்பகுதி

இது இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் காலகட்டமாகும் (ISI). 1960 இல் S.L.F.P அரசு ஆட்சிக்கு வந்தபோது 1955 இல் 7.6% மிகையாக இருந்த வர்த்தக மீதி GDP யில் 3.3% பற்றாக்குறையாக மாறிவிட்டது. 1229 மில்லியன் ரூபாவாக இருந்த வெளிநாட்டுச் சொத்தானது 541 மில்லியன் ரூபாவாக குறைந்துவிட்டது. எனவே இவ்வரசு இறக்குமதிகள் மீது கடும் கட்டுப்பாடுகளை விதித்து அதிகரித்த இறக்குமதித் தீர்வையையும் அளவுக் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்தியது. (1960 - 77 கால இறக்குமதித் தீர்வை அப்பொருள் உள்ளூர் உற்பத்தியுடன் கொண்டுள்ள போட்டியின் அளவைக் கொண்டு 10 - 500 வீதம் வரை தீர்மானிக்கப்பட்டது) அந்நியச் செலாவணியானது, அந்நியச் செலாவணி வரவு செலவுத் திட்டக் குழுவினால் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள், உரம், எரிபொருள், சில மருந்துவப் பொருட்கள் தவிர ஏனைய இறக்குமதிகள் "இறக்குமதிஉரிமம்" எனும் முறைக்குள் கொண்டு வரப்பட்டன. இதனால் 1961-65 இல் இறக்குமதிச் செலவானது வருடாந்தம் சராசரியாக 3.7% ஆல் குறைவடைந்தது. தயாரிப்புத் துறையானது 5.4% வருடாந்த சராசரி வளர்ச்சியைக் காட்டியது. இது GDP யின் வருடாந்த வளர்ச்சியான 4.2% த்தை விட 1.2 வீதத்தால் உயர்வானதாகும். இவ்வாறு இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழிலுக்கு இறக்குமதிக்கட்டுப்பாடுகள் மூலம் பாதுகாப்பு வழங்கியதுடன் 5 வருட வரி விடுதலை உட்பட பல வரிச்சலுகைகளை வழங்கி முதலீட்டையும் ஊக்குவித்தது. 1962/63-1964/65 கால குறுங்கால

அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தில் (அரச, தனியார்) மொத்த முதலீட்டில் 24.5% ஐ கைத்தொழிலுக்கு ஒதுக்கியது. 1960 இல் 541 மில்லியன் ரூபாவாக இருந்த வர்த்தக மீதிப் பற்றாக்குறை 13 மில்லியனாக குறைக்கப்பட்டது. 1960 - 1965 இற்கிடையில் வெளிநாட்டுச் சொத்தில் 101 மில்லியன் ரூபா மட்டுமே (1960 இல் 541 மில்லியன், 1965 இல் 440 மில்லியன்) குறைந்தது. 1960 இல் GDPயில் 11.5%மாக இருந்த தயாரிப்புத் துறையானது 1965 இல் 12.4% மாக அதிகரித்தது. இக்காலத்தில் GDP யின் வருடாந்த சராசரி வளர்ச்சியானது 4.2% மாக இருந்தது.

1965 இல் பதவிக்கு வந்த UNP அரசும் இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில் அமைப்பிற்குள்ளேயே செயற்பட்டது. எனினும் இறக்குமதி வர்த்தகத்தையும் செலாவணிக் கொடுப்பனவுகளையும் மிதமாகத் தாராளமயப்படுத்தியதோடு ஏற்றுமதி மேம்பாட்டையும் ஆரம்பித்து வைத்தது. பல நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வையை அகற்றியதுடன் கைத்தொழிலில் பொதுத்துறையில் ஈடுபாட்டையும் குறைத்தது. சென்மதி நிலுவைப் பிரச்சனையைச் சமாளிக்கவென இலங்கை ரூபாவை ஸ்ரேலிங் பவுணுக்கு எதிராக 20% ஆல் மதிப்பிறக்கம் செய்தது. ஆனால் இதே காலப்பகுதியில் ஸ்ரேலிங் பவுணானது அமெரிக்க டொலருக்கு எதிராக 14.3 வீதத்தினால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டமையால் இலங்கை ரூபாவில் மதிப்பிறக்கம் நிகரவிளைவாக 5.7 வீதத்தையே (மதிப்பிறக்கம்) கண்டது.

அடுத்து பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதிகளுக்கு பண ஊக்குவிப்பு வழங்கவும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்கு மேலதிக செலவை ஏற்படுத்தவும் என வெளிநாட்டு செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் (FEECS) திட்டத்தை 1968 இல் அறிமுகம் செய்தது. அளவுக்கட்டுப்பாட்டின் (QR) கீழிருந்து எல்லா இறக்குமதிகளும் "திறந்த பொது உரிமம்" (OGL) முறைக்குள் கொண்டுவரப்பட்டன. இந்நடவடிக்கைகள் பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கவென உருவாக்கப்பட்ட "வெகுமதிச் சீட்டுமுறை" (BVS) FEECS இன் அறிமுகத்துடன் நிறுத்தப்பட்டது. BVS இன் படி பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் பெறுமதியில் 20 வீத மளவிற்கு இறக்குமதி செய்யும் அனுமதிப்பங்கு இவ் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இவற்றின் விளைவாக பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதியானது வருடாந்தம் சராசரியாக 8.9 வீதத்தால் அதிகரித்ததுடன் மொத்த ஏற்றுமதியில் 1965 இல் 8.2 வீதமாக இருந்த அவற்றின் பங்கு 1970 இல் 11.5 வீதமாக அதிகரித்தது. அதே நேரம் இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் தளர்வுகளால் 1960 - 65 காலப்பகுதியில் 3.7 வீதத்தால் குறைவடைந்து வந்த இறக்குமதிச் செலவு 1965 - 70 காலத்தில் 11.3 வீதத்தால் அதிகரித்தது. வெளிநாட்டு மூலதனம், தொழில்நுட்ப அறிவு, முகாமைத்துவ கலை போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள இலாபம், சேமிப்பு போன்றவற்றை கட்டுப்பாடின்றி மாற்றல், 5 வருட வரி விடுதலை உட்பட்ட வரிச்சலுகைகளையும் வழங்கியது. 1965-1970 கால அரசு, 1960 இல் மொத்த இறக்குமதியில் 38.4 வீதமாக இருந்த உணவு குடிபானம் 1970 இல் 45.7 வீதமாக அதிகரித்தது. அதிகரித்துவரும் விவசாயப் பொருட்களின் செலவை குறைப்பதற்காக இறக்குமதி பிரதியீட்டு கைத்தொழிலிலேயே அதிக கவனம் செலுத்தி வந்தது.

1966 - 70 காலப்பகுதியில் தயாரிப்புத் துறையானது கணிசமான உயர் வளர்ச்சியான 7.3 வீத வருடாந்த வளர்ச்சியைக் காட்டியது. 1968 இலும் 1969 இலும் FEECS திட்ட அறிமுகம் காரணமாக 9% வளர்ச்சியைக்காட்டியது. பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதி 8.9 வீதத்தால் அதிகரித்தாலும் மொத்த ஏற்றுமதி 1.5 வீதத்தால் மட்டுமே அதிகரித்தது. ஆனால் மொத்த இறக்குமதி 11.3 வீதத்தால் அதிகரித்தது. 1965 இல் 13 மில்லியன் ரூபாவாக இருந்த வர்த்தகப் பற்றாக்குறை 1970 இல் 316 மில்

லியனாக அதிகரித்தது. வெளிநாட்டுச் சொத்துக்கள் 1965 இல் 440 மில்லியன் ரூபாவாக இருந்து 1970 இல் 403 மில்லியன் ரூபாவாக குறைந்தது. வெளிநாட்டுக் கடன் சேவை விகிதம் (ஏற்றுமதியின் நூற்றுவீதமாக) 1966 இல் 7.2 வீதமாக இருந்து 1970 இல் 22.5 வீதமாகியது.

1970 இல் பதவிக்கு வந்த S.L.E.P கூட்டரசு உடனடியாக இறுக்கமாக ISI உபாயத்தைக் கடைப்பிடித்தது. அரச தலையீடும் அதிகரித்தது. அதே நேரம் 1966 - 70 காலத்தில் தொடங்கப்பட்ட ஏற்றுமதி மேம்பாட்டையும் தொடர்ந்து ஊக்குவித்தது. 1972 - 76 கால ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுமதி மீதும், உள்ளூர் சந்தையை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புத்துறை மீதும் அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. மொத்த முதலீட்டில் 15.1% கைத்தொழிலுக்கு ஒதுக்கப்பட்டது. பொதுத் துறை முதலீட்டில் 17.6% மும் தனியார் முதலீட்டின் 12.9%மும் தயாரிப்புக் கைத்தொழிலுக்கு ஒதுக்கப்பட்டது. திறந்த பொது உரிமமுறை நீக்கப்பட்டு எல்லா இறக்குமதிகளும் தனியான உரிமங்களிற்குள்ளும் பங்கு (Quota) முறைகட்குள்ளும் கொண்டுவரப்பட்டன. சில பொருட்கள் அரசினால் மட்டும் இறக்குமதி செய்யப்பட்டன. தீர்வைமுறை (Tariff) யானது 5% முதல் 150% வரையான 6 படிகளை கொண்டதாக மாற்றப்பட்டது. FEECES திட்ட சான்றிதழின் பெறுமதி 44 வீதத்திலிருந்து 65 வீதமாக உயர்த்தப்பட்டது. இவற்றை விட முக்கியமாக அளவுக் கட்டுப்பாடு (QR) மிகவும் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அரசதுறையின் விரிவாக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. 1970 இல் வியாபாரங்களைப் பொறுப்பேற்கும் சட்டத்தைக் கொண்டு வந்து பல பாரிய கைத்தொழில் திறுவனங்களை அரசு பொறுப்பேற்றது. இதனால் தனியார் பல்தேசிய கைத்தொழில் நடவடிக்கைகள் சுருக்கமடைந்தன. பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க மாற்றத்தக்க ரூபாக்கணக்கு (CRA) முறையை ஆரம்பித்தது. இதன் மூலம் ஏற்றுமதியாளர் தமது ஏற்றுமதிப் பெறுமதியில் 25% ஐ CRA யில் வைத்திருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிகளுக்கு பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள் மீது விதிக்கப்பட்ட தீர்வையானது அவற்றைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரியமற்ற பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது மீளளிக்கப்பட்டது. மேலும் ஏற்றுமதி இலாபங்கள் மீது 8 வருட வரிவிடுதலை. ஏற்றுமதி மேம்படுத்தல் சபை, அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் சிறு ஏற்றுமதிப் பயிர் திணைக்களம் ஆகியவற்றின் உருவாக்கம் மூலம் பாரம்பரியமற்ற ஏற்றுமதி ஊக்குவிக்கப்பட்டது.

1970-77 பகுதியில் GDP யின் வருடாந்த சராசரி வளர்ச்சியானது 2.9 வீதமாகவே இருந்துள்ளது. 1971இல் ஏற்பட்ட சேகுராக் கலவரம் காரணமாக அவ்வாண்டின் வளர்ச்சி 0.2 வீதமாக இருந்துள்ளது. இவற்றை நீக்கிப் பார்த்தால் 3.3 வீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எந்தவொரு ஆண்டிலும் இது 4.2 வீதத்தை தாண்டவில்லை. கைத்தொழிற் துறையின் வளர்ச்சியானது மிகவும் குறைவான 1.1% சராசரி வளர்ச்சியையே காட்டியது. குறிப்பாக 1973-74 இல் எதிர்மறையாக முறையே -2.4 வீதமும் -4.5 வீதமுமாக இருந்தது. இதற்கு இறுக்கமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் 1973 இல் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடியுமே காரணமாகும். வர்த்தக நிலுவை 1975 இல் 1421 மில்லியன் ரூபா பற்றாக்குறையாக இருந்தது. 1977 இல் 350 மில்லியன் ரூபா மிகையாக மாறியது. இது அக்காலத்தில் ஏற்பட்ட தேயிலை விலைச் செழிப்பினால் ஏற்பட்டதாகும். GDP யில் தயாரிப்புத் துறையின் பங்கு 1970 இல் 16.7 வீதமாக இருந்து 1977 இல் 14.7 வீதமாகக் குறைந்தது.

1960 - 77 வரையான காலப்பகுதியானது கணிசமானளவு கைத்தொழிற்துறையினை இலங்கையில் ஆரம்பித்து வைத்தாலும் நீண்டகால அடிப்படையில் ஒரு வெற்றிகரமான இறக்குமதிப் பதிலீட்டை உரு

வாக்கவில்லை. இக்கால கைத்தொழிற் துறையானது அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியில் தான் அதிக கவனம் செலுத்தியது. இவற்றுக்கான மூலதன, இடைநிலைப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் நாட்டில் இருந்த அந்நிய செலாவணிப் பிரச்சனையானது நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் இருந்து மூலதன இடைநிலைப் பொருட்களுக்கு மாற்றப்பட்டதேயன்றி பெரியளவு மீதப்படுத்தப்படவில்லை. மேலும் இங்கு நடைமுறையிலிருந்த ISI கொள்கையானது தன்னகத்தே கொண்டிருந்த ஏற்றுமதிக்கெதிரான தன்மையானது ஏற்றுமதியை போதியளவு வேகமாக வளரவிடவில்லை என்பதும் உண்மையாகும்.

## 1977 இற்குப் பின்னரான காலப்பகுதி

இக்காலப்பகுதியை ஏற்றுமதிசார் கைத்தொழிலாக்க காலகட்டம் எனக்குறிப்பிடலாம். இக்கால கட்டம் 1977 இற்கு முற்பட்ட காலகட்டத்தைவிட பெரிதும் மாறுபட்டதாகும். 1977 இல் பதவிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசு ஒரு திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இறக்குமதி அனுமதிப்பத்திர முறையை நீக்கி புதிய தீர்வை முறை ஒன்றினை அறிமுகப்படுத்தியது. பொதுத்துறை நிறுவனங்களை தனியார்துறை நிறுவனங்களுடன் போட்டிக்காகத் திறந்துவிட்டது. மக்களுக்கு வழங்கப்பட்ட அரச மானியங்களைக் குறைத்தது. ஒரு சில அத்தியாவசியப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் மீதான உள்ளூர் விலைக் கட்டுப்பாட்டை நீக்கியது. FEECS முறை கைவிடப்பட்டு ஒருமித்த, கட்டுப்பாட்டிற்குட்பட்ட மிதக்கும் நாணயமாற்று முறை கொண்டுவரப்பட்டது. பேரளவான நாணய மாற்று வீதம் (NER) 1977 இல் அமெரிக்க டொலருக்கு எதிராக 42 வீதத்தால் மதிப்பிறக்கப்பட்டது. மீண்டும் 1989 இல் 17 வீதத்தால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தம், இரட்டை வரிச்சலுகை, முதலீட்டு மேம்பாட்டு வலயங்கள் நிறுவுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடு கவரப்பட்டது. மேலும் 1978 இல் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு (GCEC) உருவாக்கப்பட்டது. இதனையடுத்து இதே யாண்டு கட்டுநாயக்காவில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் முதலாவது முதலீட்டு மேம்பாட்டுவலயம் உருவாக்கப்பட்டது. GCEC ஆனது 1992 இல் முதலீட்டுச் சபை (BOI) யாக மாற்றப்பட்டதுடன் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு (FIAC)வும் அமைக்கப்பட்டது. ஏற்றுமதியை ஊக்குவிக்க 1979 ஆம் ஆண்டு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்தி முதலீட்டு உதவித்திட்டத்தின் (EDISS) கீழ் 3-5 வீத நேரடிக் காசு மானியம் வழங்கப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டு மூலதன உதவி வழங்கப்பட்டது. சுங்கவரி மீளளிப்புத் திட்டத்தின் கீழ் உள்ளீடுகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. அத்துடன் மூலதனப் பொருட்களின் இறக்குமதிக்கும் தீர்வையிலிருந்து விலக்கப்பட்டது. மேலும் முன்னுரிமை கடன், சந்தை பற்றிய தகவல், அரச ஆலோசனை, பயிற்சி வசதிகள் போன்ற பலவசதிகளைச் செய்து கொடுத்தது. தனியார் மயமாக்கலில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதற்கென 6 அங்கத்தவர்கள் கொண்ட குழுவொன்று 1985 இல் நியமிக்கப்பட்டது. திறமையற்ற பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. அல்லது முற்றாக மூடப்பட்டன. பொதுத்துறைக்கென சில தொழில்களை ஒதுக்கும் நிலை மாற்றப்பட்டு தனியார் எல்லாத் துறைகளிலும் பங்கெடுக்க வழிவகுக்கப்பட்டது. இவ்வாறாக 1977 இற்கு முன்னர் கட்டுப்பாட்டிற்குள் வளர்க்கப்பட்ட கைத்தொழிற் துறையானது, திறந்த பொருளாதாரக் கொள்கையினால் ஒரு கட்டுப்பாடற்ற சூழ்நிலையால் ஒரு புதிய பாதையில் (ஏற்றுமதிசார்) துரித வளர்ச்சி அடையுமென எதிர்பார்க்கப்பட்டது. 1994 இல் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணியும் இதே கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றது. மேலும் வெளிநாட்டு தனியார் நேரடி முதலீட்டை ஊக்குவிக்க

வென கட்டுதல் இயக்குதல் சொந்தமாக்கல் (BOO) மற்றும் கட்டுதல் இயக்குதல் கைமாற்றுதல் (BOT) என்ற திட்டங்களையும் செயற்படுத்துகின்றது.

1977 இற்குப் பின்னரான கைத்தொழிற் கட்டமைப்பு மாற்றத்தை எடுத்து நோக்கின் 1977 இல் கிட்டத்தட்ட 70 ஆகவும் 1985 இல் 209 ஆகவும் இருந்த கைத்தொழில் நிறுவனங்கள் 1996 இல் 606 ஆக உயர்ந்துள்ளது. முதலீட்டுச் சபையின் கீழ் வெளிநாட்டு முதலீடு 1996 இல் 60,000 மில்லியன் ரூபாவை விட சற்று அதிகமாக உள்ளது. இதேயாண்டில் கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 2,60,247 மில்லியன் ரூபாவாக இருந்தது. 1977 இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதியில் 14.2 வீதமாகவும் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முறையே 2.7, 23.9 வீதமாக இருந்தது. 1977 இற்கு முன்னர் வருடாந்த சராசரி வளர்ச்சியாக 1.1 வீதத்தையே காட்டிய தயாரிப்புத் துறையானது 1978 - 82 பகுதியில் 4.6 வீதத்தையும் பின்பு 6 வீதத்திற்கு மேலாகவும் 1993 - 94 பகுதியில் சராசரியாக 9.8 வீத வளர்ச்சியையும் காட்டியது. அதே நேரம் GDP யில் தயாரிப்புத்துறையின் பங்கு 1987 இல் 16.2 வீதமாக இருந்தது. இது 1970 இன் 16.7 வீதத்தை விடக் குறைவானதாகும். எனினும் இது 1994 இல் 19.7 வீதமாக அதிகரித்துள்ளது. 1970 - 77 பகுதியில் 53 வீதமாக இருந்த கைத்தொழில் துறையின் இயலளவுப் பயன்பாடு 1996 இல் 79.9 வீதமாக அதிகரித்தது. 1980 இல் 35 வீதமாக இருந்த கைத்தொழில் துறையில் தனியாரின் பங்கு 1990 இல் 75 வீதமாகவும் 1996 இல் 91 வீதமாகவும் அதிகரித்தது. GDP இல் தயாரிப்புத்துறையின் பங்கு (20.4%) முதன்முதலில் விவசாயத் துறையின் பங்கினைவிட (20%) 1995இல் அதிகரித்தது. GDP இன் வளர்ச்சிக்கு கைத்தொழிற்துறையின் சார்பளவுப் பங்கு 1978 - 83 வரை (1981 இல் 1.3%, 1982 இல் 1.8%) குறைவானதாகவே காணப்பட்டது. GDP யானது 1978 - 82 பகுதியில் வருடாந்தச் சராசரியாக 6.2 வீதத்தையும் பின் 1983 - 87, 1988 - 92 பகுதிகளில் குறைந்தளவாக முறையே 4.1%, 4.0% வளர்ச்சியைக் கண்டது. ஆயினும் இது 1993, 94 இல் சராசரியாக 6.3 வீதத்தால் வளர்ந்தது.

1977 இற்கு முன்னர் வேளாண்மை, ஏற்றுமதிப் பதனிடல், கைத்தொழிலைவிட 1977இற்குப் பின்னர் தொழிற்சாலைக் கைத்தொழில்கள் துரிதவளர்ச்சி அடைந்து வருகின்றது. கைத்தொழில் மாற்றமானது இறக்குமதிப் பதிலீட்டிலிருந்து ஏற்றுமதி சார் கைத்தொழிலுக்கும் ஏற்றுமதி மாற்றமானது பாரம்பரிய விவசாயப் பொருட்களின் பெரியளவான ஏற்றுமதியில்இருந்து பாரம்பரியமற்ற பொருட்களுக்கும் மாறியதால் 1996 இல் மொத்த ஏற்றுமதியில் 73.4% கைத்தொழிற் பொருட்களாகவும் 46.4% புடவை ஆடையாகவும் மாறியுள்ளது. எனினும் நாம் இத்தரவுகளைக் கவனமாக விளங்கிக் கொள்ளவேண்டும். காரணம் 1995 இல் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியானது 2,21,440 மில்லியன் ரூபாவாகும். ஆனால் இதில் கூட்டிய பெறுமதி (Value Added) 81,386 மில்லியன் மட்டுமே. அதேபோல ஏற்றுமதியிலே 46.4 வீதத்தை புடவை ஆடைகள் நிரப்புகின்றன. புடவை ஆடைகளின் கூட்டிய பெறுமதி குறைவான உற்பத்திகளே ஆகும். எனவே இலங்கையில் தேசிய வருமானம், பொருளாதார அபிவிருத்தி என்ற நோக்கிலே கைத்தொழில் துறையானது போதுமானதாக இல்லை. இதனால் இலங்கையில் கைத்தொழில்த் துறையை வளர்ப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுதல் அவசியமாகக் கருதப்படுகின்றது.

1) அரசினுடைய நிலச்சீர்திருத்த கொள்கைகள் விவசாயத்துறையிலுள்ள சுதேச முதலீட்டாளர்களை கைத்தொழில் துறையில் முதலீட்டினை மேற்கொள்ளக்கூடியவர்களாக மாற்றியமைக்கவில்லை என்பதால் கைத்தொழிலில் முயற்சியாளர்

வர்க்கம் ஒன்று உருவாக்கப்படுவது அவசியமானது.

2) மொத்த உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்கு அதிகரித்தாலும் கூட்டப்பட்ட பெறுமதியடிப்படையில் அதன் பங்கு பெரிதாக அதிகரிக்காமையால், இடைத்தர உள்ளீட்டுப்பொருட்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தல் வேண்டும்.

3) முதலீட்டாளர்களிடையே தொடர்புகளை அதிகரித்து வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சலில் உள்ள தடைகளை அகற்றுவதுடன் முதலீடு பற்றிய தகவல்களையும் போதியளவு பெறக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். அவற்றுடன் பொருத்தமான நுணுக்கங்கள், கட்டுமான அமைப்பு என்பனவும் முக்கியமானது.

4) இலங்கை பல காலமாக விவசாயப் பொருட்கள், மீன் மற்றும் கனிப்பொருள் என்பவற்றையே ஏற்றுமதி செய்யினும் ஆசிய பசுபிக் பிரதேசத்தில் மின் இயக்கப் பொருட்களுக்கே அதிக கேள்வி காணப்படுவதால் இலங்கையும் அதற்கான முயற்சியில் ஈடுபட முன்வர வேண்டும்.

இவ்வாறாக, இலங்கையில் காலத்திற்குக் காலம் கைத்தொழிலை வளர்ப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் புதிய கைத்தொழில் மயமாகிய (NIC) நாடு என்று கூறக்கூடிய அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை. 2000 ஆண்டில் கூட இலங்கை NIC அந்தஸ்தினை எட்டிவிடுமெனக் கூறப்படும் கருத்துக்கள் கூட சாத்தியமானதாக இல்லை. இலங்கையில் பின்பற்றப்பட்ட ISI உபாயமானது கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தமையால் இது ஏற்றுமதியைப் பாதித்தது. அத்துடன் வளங்கள் வினைத்திறனுடன் பாவிக்கப்படவில்லை. இதன் விளைவாக ஒரு கட்டத்தில் தயாரிப்புத் துறையானது செலாவணிப் பிரச்சனையால் அபாயகரமான கட்டத்திற்கு தள்ளப்பட்டது. மேலும் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும் அதேவேளை தேசியமயமாக்கல் போன்ற முரணான நடவடிக்கைகளால் 70 களின் நடுப்பகுதியில் ISI உபாயமானது மேலும் நகரமுடியாத நிலைக்கு வந்தது. EOI உபாயமானது ஒரு பரிசோதனை மட்டமாகவே காணப்படுகின்றது. பாதுகாப்புக்கள் நீக்கப்பட்டமையால் உள்ளூர் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யத் தயங்கினர். வர்த்தகத் தாராளமயமாக்கலும் வெளிநாட்டு முதலுமே முக்கியமாகக் கருதப்பட்டது. இதனால் இங்கு வெளிநாட்டிலிருந்து வந்த இலகு கைத்தொழில்களே உருவாகின. பாரிய கைத்தொழில்களோ, உயர் தொழில்நுட்பமோ கிடைக்கவில்லை. மேலும் இலங்கை தெரிவு செய்யும் அபிவிருத்திப் பாதைகள் எதுவானாலும் அவை முன்னேறிய நாடுகளில் கட்டுக்கோப்பிற்கு உட்பட்டதாக அமைய வேண்டி இருப்பதால் இலங்கையின் கைத்தொழில் துறையில் பெரியளவில் விரும்பத்தக்க மாற்றங்கள் ஏற்படாமைக்கு பின்னணியாக விளங்குகின்றது எனின் மறுப்பதற்கில்லை.

## KEY TO ABREVIATIONS

GDP - Gross Domestic Product.
SLFP - Sri Lanka Freedam Party.
UNP - United National Party.
FEECS - Foreign Exchange Entitlement Certificate Scheme.
QRS - Quota Ratio System.
OGL - Open General License.
BVS - Bonus Voucher Scheme.
CRA - Convertible Rupee Accounts.
GCEC - General Colombo Economic Commission.
NER - Nominal Exchange Rate.
FIAC - Foreign Investment Advisory Committee.
BOO - Build Operate and Own.
BOT - Build Operate and Transfer.
BOI - Board of Investment.
EPZ - Export Processing Zone.
LIAC - Local Investment Advisory Committee.
FTZ - Free Trade Zone.
EOI - Export Oriented Industrialisation.
ISI - Import Substitution Industrialisation.
EE - Export Economy.
NICs - Newly Industrialising Countries.
FDI - Foreign Direct Investment.
RER - Real Exchange Rate.

## REFERENCE.


1. Welfare and Economic growth in Sri Lanka Marga Publication - 1974.
2. Dilemmas of Development (Page 341-385) Fifty years of Economic change in Sri Lanka
   W.D.Lakshman.
   Sri Lanka Association of Economists - 1997.
3. Economic Review (Page 2-4, 4-30, 20-23,30) (Combine issue June/July 1997)
4. Economics Progress of Independent Sri Lanka (3.2) Industry. Page 107-127. Central Bank of Sri Lanka - 1998.
   Published on the Occasian of the fiftieth Anniversary of the Independence of Sri Lanka 1998.
5. Economic and Social Statistics of Sri Lanka 1986, 1990, 1995, 1997.
6. மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் - மத்திய வங்கி வெளியீடு 1977, 1986, 1990, 1995, 1997.